# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2024.06.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 36.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 183 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் 3 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம் அச்சட்டவாக்கத்திலுள்ள 183அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது குற்றவழக்கு தொடுநரையும் தண்டனை நிறைவேற்றப்படுமுன்னர் எந்நேரத்திலும் மன்றுரை உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதற்கு நீதிவான் நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்படுகின்ற குற்றஞ்சாட்டப்பட்டவரையும் இயலச்செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்குமாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 195அ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் 6 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 197 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் 6 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம் அச்சட்டவாக்கத்திலுள்ள 197அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது குற்றவழக்கு தொடுநரையும், தண்டனை நிறைவேற்றப்படுமுன்னர் ஏதேனும் நேரத்தின் மன்றுரை உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதற்கு மேல் நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்படுகின்ற குற்றஞ்சாட்டப்பட்டவரையும் இயலச்செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்குமாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாவது அட்டவணையைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது மன்றுரை உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளும் நோக்கத்திற்கான நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மன்றுரை உடன்படிக்கையின் குறித்த வடிவத்திற்காக அவ்வட்டவணையில் 23 ஆம் இலக்க புதிய படிவத்தை உட்புகுத்துவதற்குமாகும்.

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

*ச.வ.ஓ. 24/2023*

### *1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்         ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்தின் 183 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 183 ஆம் பிரிவானது, அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"குற்றவாளி என்ற
மன்றுரையும் எழுத்திலான
மன்றுரை உடன்படிக்கை
இன்றிய தண்டனைத் தீர்ப்பும்"

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 183அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 183 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 183அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

"குற்றவாளி என்ற மன்றுரையும் எழுத்திலான மன்றுரை உடன்படிக்கையுடனான தண்டனைத் தீர்ப்பும்

**183அ.** (1) இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுக்கு அமைய, தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படுவதன் முன்னர் எந்த நேரத்திலும் குற்றவழக்குதொடுநருக்கும் மற்றும் நீதிவான் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் இடையே மன்றுரை உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்படலாம்.

(2) வழக்கொன்றுக்கான திறத்தவர்கள் இப்பிரிவின்கீழ் மன்றுரை உடன்படிக்கையொன்று பற்றிய பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு உட்கருதுமிடத்து, அதுபற்றி நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், நீதிமன்றமானது அத்தகைய மன்றுரை உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றுதல் ஆகாது.

(3) குற்றவழக்குத்தொடுநர், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான சட்டத்தரணி அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றுரை உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்கான முனைவு ஒன்றை ஆரம்பிக்கலாம்:

ஆயின், குற்றவழக்குத்தொடுநர், குற்றஞ்சாட்டப்பட்டவருடன் மன்றுரை உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்வதா அல்லது இல்லையா என்பது பற்றி தனித் தற்றுணிவை பேணுதல் வேண்டும்.

(4) குற்றஞ்சாட்டப்பட்டவர் (22 ஆம் அத்தியாயமான) குற்றச்செயல்களைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணையின் கீழான தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்டிருப்பின், நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கைவிர

லடையாளத்தை எடுக்கச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன், கைவிரலடையாள அறிக்கை ஒன்றையும் கோருதல் வேண்டும்.

(5) மன்றுரை உடன்படிக்கை ஒன்றுக்கான பேச்சுவார்த்தைகள் குற்றவழக்குத்தொடுநருக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்ற சட்டத்தரணிக்கும் இடையே நடாத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், மன்றுரை உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்வதற்கு உட்கருதுகின்ற குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர், சட்டத்தரணி ஒருவரால் பிரதி நிதித்துவப்படுத்தப்படாதவிடத்து, நீதிமன்றம் ஆனது, சட்டத்தரணியொருவர் வேண்டுமா எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தினாற் கேட்கப் படுவதன்மேல், அவர் வேண்டுமென்று கூறினால், குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் பேச்சு வார்த்தையை நடாத்துவதற்கு சட்டத்தரணி ஒருவரைக் குறித்தளித்தல் வேண்டும்.

(6) மன்றுரை பேச்சுவார்த்தைச் செயல்முறை யின் பாகமொன்றாக, குற்றவழக்குதொடுநர், குற்றஞ்சாட்டப்பட்டவர் பேச்சுவார்த்தையின் போது ஒத்துழைப்புடன் வழங்கக்கூடிய குற்றஞ் சாட்டப்பட்டவர் ஈடுபட்டுள்ள குற்றவியல் நடத்தை பற்றிய பூரணமான விபரணம் ஒன்றையும் மற்றும் மற்றவர்கள் ஈடுபட்டுள்ள குற்றவியல் நடத்தை விபரங்களையும் குற்றவழக்குத்தொடுநர் தரப்பின் திருப்திக்கு ஆய்ந்தறிவதற்கு குற்றஞ் சாட்டப்பட்டவருக்கான சட்டத்தரணியை சந்திக்க லாம்.

(7) குற்றவழக்குத்தொடுநர் மன்றுரைப் பேச்சுவார்த்தைகளின் போது—

(அ) வழக்குத் தொடர்பான தன்மையும் சூழ்நிலைகளும், பலியாக்கப்பட்டவர் மீது தவறு புரிந்தமையின் தாக்கம், குற்றஞ்சாட்டப்பட்டவரின் தனிப்பட்ட சூழ்நிலைகள், பொதுமக்கள் அக்கறைகள் மற்றும் பேச்சுவார்த்தையின் குற்றஞ் சாட்டப்பட்டவரினால் வழங்கப் பட்ட ஏதேனும் ஒத்துழைப்பு உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவலின் பெறுமானம் என்பனவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண் டும்;

(ஆ) மன்றுரை பேச்சுவாாத்தைகள் இறுதியில் வெற்றியளிக்காதிருப் பின், வழக்கின் குற்றவழக்குத் தொடுப்பின் போது குற்றஞ்சாட்டப் பட்டவரிடமிருந்து மன்றுரைப் பேச்சுவார்த்தையின் போது பெறப் பட்ட தகவல்களை, அவருக்கு எதிராக பயன்படுத்துதலாகாது; அத்துடன்

(இ) (i) பலியாக்கப்பட்டவருக்கு;

(ii) பலியாக்கப்பட்டவருக்கான சட்டத்தரணிக்கு; அல்லது

(iii) 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக் குப் பலியாக்கப்பட்டோருக் கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச்

சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபைக்கு,

சூழ்நிலைகள் அத்தகைய பிரதிநிதித்துவத்தைத் தடுத்தலான்றி, குற்றச்யெலின் தாக்கம் தொடர்பாக வழக்குத் தொடுப்பிற்கான எழுத்திலான விளக்கவுரையொன்றை ஆக்குவதற்கு நியாயமான சந்தர்ப்பம் ஒன்றை அளித்தல் வேண்டும்.

(8) (அ) ஒரு குற்றவழக்குத்தொடுநர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான சட்டத்தரணி ஒவ்வொருவரும் விதிக்கப்பட வேண்டிய தண்டனைத் தீர்ப்புப் பற்றி நீதிமன்றத்திற்கு குறித்த விதப்புரை ஒன்றை ஆக்கலாம் என்பதுடன், இறுதி மன்றுரை உடன்படிக்கையில் எழுத்திலான விதப்புரையை உள்ளடக்கலாம்.

(ஆ) திறத்தவர்களின் விதப்புரை எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றம் தண்டனையளிப்பதில் தனித் தற்றுணிபை வைத்திருத்தல் வேண்டும்.

(இ) மன்றுரை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட விதப்புரையைப் பார்க்கிலும் மிகவும் கடுமையான தண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதனை குற்றவழக்குதொடுநர் நீதிமன்றத்திற்கு விதப்புரை செய்கின்றவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்ற மன்றுரையை மீறப் பெறலாம் என்பதுடன், மன்றுரை உடன்படிக்கையைத் தள்ளிவைக்கலாம்.

(ஈ) மன்றுரை உடன்படிக்கையிலுள்ள விதப்புரையைப் பார்க்கிலும் கடுமை குறைவான தண்டனை தீர்ப்பொன்றை விதிப்பதனை நீதிமன்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் விதப்புரை செய்கின்றவிடத்து, அந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் அந்த ஏது மீது மட்டுமே அவரது குற்றமன்றுரையை மீளப்பெறுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(உ) மன்றுரை உடன்படிக்கையில் உள்ள விதப்புரையை பார்க்கிலும் கடுமை குறைவான தண்டனைத் தீர்பொன்றை விதிப்பதனை நீதிமன்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் விதப்புரை செய்கின்றவிடத்து, குற்றவழக்குத்தொடுநர் வேறு ஏதேனும் தோதான தண்டனைத் தீர்ப்பொன்றை நீதிமன்றத்திற்கு விதப்புரை செய்யலாம்.

(9)(அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றுரை உடன்படிக்கையின் நியதிகளுக்கு இணங்க குற்றத்தை மன்றுரை செய்கின்றவிடத்து, வழக்குதொடுநர், கேட்பில் இறுதி மன்றுரை உடன்படிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதன்மூலம் குற்றவழக்குதொடுநர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இடையில் மன்றுரை உடன்படிக்கையில் தரப்பட்ட மன்றுரையின் நிகழ்வுசார் அடிப்படையுடன் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். நிகழ்வுசார் அடிப்படையானது பூர்த்திசெய்யப்பட்ட மன்றுரை உடன்படிக்கையின் பாகமொன்றாக எழுத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மன்றுரை உடன்படிக்கை இரண்டாவது அட்டவணையிலுள்ள படிவம் 23 இல் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் இருத்தல் வேண்டும்.

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் பிள்ளை ஒருவராக இருக்கின்றவிடத்து, மன்றுரை உடன்படிக்கை ஆனது பிள்ளையினது பெற்றோரினால் அல்லது பாதுகாவலரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(ஈ) மன்றுரை உடன்படிக்கை ஒன்று குற்றஞ் சாட்டப்பட்டவர் உடன்படிக்கையை கையொப்ப மிடுகின்றபோது இறுதியானதாக்கப்படுதல் வேண்டும்.

(10) குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிந்து கொண்டும் தன்னிச்சையாகவும் மன்றுரை உடன்படிக்கையை கையொப்பமிட்டுள்ளார் என திருப்திப்படுவதன் மேல், நீதிமன்றமானது மன்றுரை உடன்படிக் கையை ஏற்றுக்கொள்ளலாம்.

(11) நீதிமன்றமானது மன்றுரை உடன்படிக்கை ஒன்றை ஏற்றுக்கொள்கின்றவிடத்து, அவ்உடன் படிக்கையானது திறத்தவர்கள் மீது பிணிப்பதாக வருதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமானது அதற்கிணங்க குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்றத் தீர்ப்பளிப்பதற்கு முற்படுதலும் வேண்டும்.

(12) நீதிமன்றமானது மன்றுரை உடன் படிக்கையை ஏற்றுக்கொண்டு உட்பிரிவு (11) இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்றத்தீர்ப்பளிக்கப் பட்ட பின்னர் விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பு ஒன்றிலிருந்து மேன்முறையீடு ஒன்றைச் செய்தலா காது.

(13) மன்றுரை உடன்படிக்கையில் திறத்தவர் களினால் விதப்புரை செய்யப்பட்ட தண்டனை வரம்பினுள் வருகின்றதான நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றிலிருந்து மேன்முறையீடொன்று இருத்தலாகாது.

(14) நீதிமன்றமானது மன்றுரை உடன்படிக்கையை நிராகரிக்கின்றவிடத்து —

(அ) அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்கள் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், திறத்தவர்களுக்கு அதுபற்றி அறிவித்தலும் வேண்டும்.

(ஆ) மன்றுரை உடன்படிக்கையானது வெற்றும் வறிதுமானதாதல் வேண்டுமென்பதுடன், திறத்தவர்கள் அத்தகைய உடன்படிக்கையினால் பிணிக்கப்படுதலுமாகாது.

(15) மன்றுரை உடன்படிக்கை ஒன்றினை நிராகரிப்பதன் மீது அல்லது மீளப்பெறுவதன் மீது, அதே நிகழ்வுகள் தொடர்பான விளக்கம் ஒன்றில், புதிய மன்றுரை பேச்சுவார்த்தைகள் நீதிமன்றத்தின் முன்னனுமதியுடன் கருத்திற்கெடுக்கப்படலாம்.

(16) நீதிமன்றம் இப்பிரிவின் கீழான மன்றுரை உடன்படிக்கை ஒன்றை நிராகரித்துள்ளவிடத்து, திறத்தவர் எவரும் உடன்படிக்கையை நிராகரிக்கின்ற நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்தலாகாது அல்லது கட்டளையின் மீளாய்வு ஒன்றுக்காக விண்ணப்பித்தலாகாது.

(17) இப்பிரிவில் நோக்கங்களுக்காக —

"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதிற்கு குறைவான ஆளொருவர்;

"குற்றவழக்குத்தொடுநர்" ஆனவர் இச்சட்டக் கோவையின் 191 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அத்த

கைய சொற்றொடருக்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழலுக்கெதிரான சட்டத்தின்படி தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக் குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலர் அல்லது அத்தகைய ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட குற்றப்பத்திரம் மீது நீதிவான் நீதிமன்றத்தில் நடாத்தப்பட்ட தவறு பற்றிய விளக்கம் ஒன்றில் குற்ற வழக்குத்தொடுப்பை நடாத்துவதற்கு அத்தகைய ஆணைக்குழுவினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் சட்டத்தரணிகளை ஆகியோரை உள்ளடக்குகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 195அ என்னும் பிரிவினைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 195அ என்னும் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "என நிச்சயிப்பதற்கும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "என நிச்சயிப்பதற்கும், 197அ என்னும் பிரிவின்கீழ் மன்றுரை உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்குப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அவர் உட்கருதுகின்றாரா என நிச்சயிப்பதற்கும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 197 ஆம் பிரிவானது அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 197 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

*"குற்றவாளி என மன்றுரைத்தலும் எழுத்திலான மன்றுரை உடன்படிக்கை இன்றி தண்டனைத் தீர்ப்பளித்தலும்.".*

***6.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 197 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத் தப்படுகின்தென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 197அ என்னும் பிரிவாக பயனறுதலும் வேண்டும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 197அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்*

*"குற்றவாளியென மன்றுரைத்தலும் எழுத்திலான மன்றுரை உடன்படிக்கையுடன் தண்டனைத் தீர்ப்பளித்தலும்*

***197அ.*** (1) ஒரு மன்றுரை உடன்படிக்கையானது குற்றவழக்குதொடுநருக்கும் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வுசெய்யப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் இடையில் இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுக்கு அமைய தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர் ஏதேனும் எந்நேரத்திலும் செய்து கொள்ளப்படலாம்.

(2) வழக்கொன்றுக்கான திறத்தவர்கள் இப்பிரிவின்கீழ் மன்றுரை உடன்படிக்கையொன்று பற்றிய பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு உட்கருதுகின்றவிடத்து, அதுபற்றி நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், நீதிமன்றமானது அத்தகைய மன்றுரை உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுதலாகாது.

(3) குற்றவழக்குத்தொடுநர், குற்றஞ்சாட்டப் பட்டவருக்கான சட்டத்தரணி அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் மன்றுரை உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதற்கு முனைவு ஒன்றை ஆரம்பிக்க லாம்:

ஆயின், குற்றவழக்குத்தொடுநர் குற்றஞ்சாட்டப் பட்டவருடன் மன்றுரை உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதா அல்லது இல்லையா என்பது பற்றி தனித் தற்றுணிபை பேணுதல் வேண்டும்.

(4) குற்றஞ்சாட்டப்பட்டவர் மேல்நீதிமன்றத்தில் குற்றப்பகர்வு செய்யப்பட்டிருந்தால், நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கைவிரலடையாளத்தை எடுக்கச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன், 195 ஆம் பிரிவின் (உ) என்னும் பந்தியின் ஏற்பாடு களைப் பின்பற்றி கைவிரலடையாள அறிக்கை ஒன்றைக் கோருதலும் வேண்டும்.

(5) மன்றுரை உடன்படிக்கை ஒன்றுக்கான பேச்சுவார்த்தைகள் குற்றவழக்குத்தொடுநருக்கும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சட்டத்தரணிக்கு இடையில் நடாத்தப் படுதல் வேண்டும்:

ஆயின், மன்றுரை உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்வதற்கு உட்கருதுகின்ற குற்றஞ் சாட்டப்பட்டவர் சட்டத்தரணி ஒருவரால் பிரதி நிதித்துவப்படுத்தப்படாதவிடத்து, நீதிமன்றம் ஆனது, சட்டத்தரணியொருவர் வேண்டுமா எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தினாற் கேட்கப் படுவதன்மேல், அவர் வேண்டுமென்று கூறினால் குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் பேச்சு வார்த்தையை நடாத்துவதற்கு சட்டத்தரணி ஒருவரை குறித்தளித்தல் வேண்டும்.

(6) மன்றுரை பேச்சுவார்த்தைச் செயல்முறையின் பாகமொன்றாக, குற்றவழக்குத்தொடுநர் குற்றஞ்சாட்டப்பட்டவர் பேச்சுவார்த்தையின் போது ஒத்துழைப்புடன் வழங்கக்கூடிய குற்றஞ்சாட்டப்பட்டவர் ஈடுபட்டுள்ள குற்றவியல் நடத்தை பற்றிய பூரணமான விபரணம் ஒன்றையும் மற்றும் மற்றவர்கள் ஈடுபட்டுள்ள குற்றவியல் நடத்தை விபரங்களையும் குற்றவழக்குதொடுநர் தரப்பின் திருப்திக்கு ஆய்தறிவதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான சட்டத்தரணியை சந்திக்கலாம்.

(7) குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதிநிதித்துவப்படுத்தகின்ற சட்டத்தரணியுடனான பேச்சுவார்த்தைகளின் போது, குற்றவழக்குத்தொடுநர் -

(அ) வழக்குத் தொடர்பான தன்மையும் சூழ்நிலைகளும், பலியாக்கப்பட்டவர் மீது தவறு புரிந்தமையின் தாக்கம், குற்றஞ்சாட்டப்பட்டவரின் தனிப்பட்ட சூழ்நிலைகள், பொது மக்கள் அக்கறைகள் மற்றும் பேச்சுவார்த்தையின் பாகமொன்றாக குற்றஞ்சாட்டப்பட்டவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒத்துழைப்பு உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவலின் பெறுமானம் என்பனவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) மன்றுரைப் பேச்சுவார்த்தைகள் இறுதியில் வெற்றியளிக்காதிருப்பின், வழக்கின் குற்றவழக்குதொடுப்பின் போது குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து மன்றுரைப் பேச்சுவார்த்தையின் போது

பெறப்பட்ட தகவல்களை அவருக்கு எதிராக பயன்படுத்துதலாகாது; அத்துடன்

(இ) (i) பலியாக்கப்பட்டவருக்கு;

(ii) பலியாக்கப்பட்டவருக்கான சட்டத்தரணிக்கு; அல்லது

(iii) 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புக்கான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கு பலியாக்கப் பட்டோர் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபைக்கு,

சூழ்நிலைகள் அத்தகைய பிரதிநிதித் துவத்தைத் தடுத்தலின்றி, குற்றச்செயலின் தாக்கம் தொடர்பாக குற்றவழக்குத் தொடுப்பதற்கான எழுத்திலான விளக்க வுரையொன்றை ஆக்குவதற்கு நியாயமான சந்தர்ப்பம் ஒன்றை அளித்தல் வேண்டும்.

(8)(அ) ஒரு குற்றவழக்குதொடுநர், மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவரின் சட்டத்தரணி தண்டனைத் தீர்ப்புப் பற்றி நீதிமன்றத்திற்கு குறித்த விதப்புரை ஒன்றை ஆக்கலாம் என்பதுடன், இறுதி மன்றுரை உடன்படிக்கையில் எழுத்திலான விதப்புரையை உள்ளடக்கலாம்.

(ஆ) திறத்தவர்களின் விதப்புரை எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றம் தண்டனை யளிப்பதில் தனித் தற்றுணிபை வைத்திருத்தல் வேண்டும்.

(இ) மன்றுரை உடன்படிக்கையில் உள்ளடக்கப் பட்ட விதப்புரையைப் பார்க்கிலும் மிகவும் கடுமையான தண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதனை பற்றி குற்றவழக்குதொடுநர் நீதிமன்றத்திற்கு விதப்புரை செய்கின்றவிடத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது குற்றமன்றுரையை மீளப்பெறலாம் என்பதுடன், மன்றுரை உடன் படிக்கையைத் தள்ளிவைக்கலாம்.

(ஈ) குற்றஞ்சாட்டப்பட்டவர் பந்தி (9) வின் கீழ் மன்றுரையை மீளப்பெற்றுள்ளவிடத்து, நீதிபதி, குற்றத்தீர்ப்பு ஒன்று பதிவுசெய்யப்படாதிருக்கின்றது என்றாற்போன்று விளக்கத்திற்கு முற்படுதல் வேண்டும்.

(உ) மன்றுரை உடன்படிக்கையிலுள்ள விதப்புரையைப் பார்க்கிலும் கடுமை குறைவான தண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதனை நீதிமன்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் விதப்புரை செய்கின்றவிடத்து, அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் அந்த ஏதுமீது மட்டும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற மன்றுரையை மீளப்பெறுவதற்கு அனுமதிக்கப் படுதலாகாது.

(ஊ) மன்றுரை உடன்படிக்கையில் உள்ள விதப்புரையைப் பார்க்கிலும் கடுமை குறைவான தண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதனை நீதிமன்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் விதப்புரை செய்கின்றவிடத்து, குற்றவழக்குத்தொடுநர் வேறு ஏதேனும் தோதான தண்டனைத் தீர்ப்பொன்றை நீதிமன்றத்திற்கு விதப்புரை செய்யலாம்.

(9) (அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றுரை உடன்படிக்கையின் நியதிகளுக்கு இணங்க குற்ற மன்றுரை செய்கின்றவிடத்து, குற்றவழக்குதொடுநர் கேட்பில் இறுதி மன்றுரை உடன்படிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் மன்றுரை உடன்படிக்கையில் தரப்பட்ட மன்றுரையின் நிகழ்வுசார் அடிப்படையுடன் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். நிகழ்வுசார் அடிப் படையுடன் பூர்த்திசெய்யப்பட்ட மன்றுரை உடன்படிக்கையின் பாகமொன்றாக எழுத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மன்றுரை உடன்படிக்கை இரண்டாவது அட்ட வணையிலுள்ள படிவம் 23 இல் குறித்துரைக் கப்பட்ட வடிவத்தில் இருத்தல் வேண்டும்.

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் பிள்ளை ஒருவராக இருக்கின்றவிடத்து, மன்றுரை உடன்படிக்கை யானது அப்பிள்ளையினது பெற்றோரினால் அல்லது பாதுகாவலரினால் கையொப்பமிடப் படுதல் வேண்டும்.

(ஈ) மன்றுரை உடன்படிக்கை ஒன்று குற்றஞ் சாட்டப்பட்டவர் உடன்படிக்கையில் கையொப்ப மிடுகின்றபோது இறுதியானதாக்கப்படுதல் வேண்டும்.

(10) நீதிமன்றமானது குற்றஞ் சாட்டப்பட்டவர் அறிந்து கொண்டும் தன்னிச்சையாகவும் மன்றுரை உடன்படிக்கையை கையொப்பமிட்டுள்ளார் என திருப்திப்படுவதன் மேல், மன்றுரை உடன்படிக் கையை ஏற்றுக்கொள்ளலாம்.

(11) நீதிமன்றமானது மன்றுரை உடன்படிக்கை ஒன்றை ஏற்றுக்கொள்ளுகின்றவிடத்து, அவ்வுடன்

படிக்கை திறத்தவர்கள் மீது பிணிப்பதாக வருதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமானது அதற்கிணங்க குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்றத்தீர்ப்பளிப்பதற்கும் முற்படுதலும் வேண்டும்.

(12) நீதிமன்றமானது மன்றுரை உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு உட்பிரிவு (11) இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பொன்றிலிருந்து மேன்முறையீடு ஒன்றைச் செய்தலாகாது.

(13) மன்றுரை உடன்படிக்கையில் திறத்தவர்களினால் முன்மொழியப்பட்டு விதப்புரை செய்யப்பட்ட தண்டனை வரம்பினுள் வருகின்றதான நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றிலிருந்து மேன்முறையீடொன்று இருத்தலாகாது.

(14) நீதிமன்றமானது மன்றுரை உடன்படிக்கை ஒன்றை நிராகரிக்கின்றவிடத்து —

(அ) அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்கள் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், திறத்தவர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) மன்றுரை உடன்படிக்கையானது வெற்றும் வறிதானதாகவும் வருதல் வேண்டுமென்பதுடன் திறத்தவர்கள் அத்தயை உடன்படிக்கையினால் பிணிக்கப்படுதலாகாது.

(15) மன்றுரை உடன்படிக்கை ஒன்றினை நிராகரிப்பதன்மீது அல்லது மீளப்பெறுதல் மீது, அதே குற்றச்சாட்டுதல் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான விளக்கம் ஒன்றில் புதிய மன்றுரைப் பேச்சுவார்த்தைகள் கருத்திற்கெடுக்கப்படலாம்.

(16) நீதிமன்றமானது இப்பிரிவின் கீழான மன்றுரை உடன்படிக்கை ஒன்றை நிராகரித்துள்ளவிடத்து, திறத்தவர் எவரும் உடன்படிக்கையை நிராகரிக்கின்ற நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்தலாகாது அல்லது கட்டளையின் மீளாய்வு ஒன்றுக்கு விண்ணப்பித்தலாகாது.

(17) இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதிற்கு குறைவான ஆளொருவர் எனப் பொருள்படும்;

"குற்றவழக்குத்தொடுநர்" ஆனவர் இச்சட்டக் கோவையின் 191 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அத்தகைய சொற்றொடருக்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழலுக்கெதிரான சட்டத்தின்படி தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய ஆணைக் குழுவின் அலுவலர் அல்லது

அத்தகைய ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட குற்றப் பகர்வு மீது மேல்நீதிமன்றத்தில் நடாத்தப்பட்ட தவறு பற்றிய விளக்கம் ஒன்றில் குற்றவழக்குத் தொடுப்பை நடாத்துவதற்கு அத்தகைய ஆணைக்குழுவினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் சட்டத்தரணிகளை ஆகியோரை உள்ளடக்குகின்றது.".

முதன்மை சட்டவாக்கத்திற்கான இரண்டாவது அட்டவணையினைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்திற்காக இரண்டாவது அட்டவணையானது அதன் 22 ஆம் படிவத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய படிவத்தினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன் அவ்அட்டவணையின் 23 ஆம் படிவமாக பயனுறுதலும் வேண்டும்.

"இல.23

[பிரிவுகள் 183அ மற்றும் 197அ}

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
நீதிமன்றத்தில் ..............................
வழக்க இல. ...............................
குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர்.............

**மன்றுரை உடன்படிக்கை**

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 183அ / 197அ என்னும் பிரிவினைப் பின்பற்றி .............................. என்னும் குற்றஞ்சாட்டப்பட்டவர் பின்வருமாறு உடன்படுகின்றார்.

s



| |
|---|
| 1. குற்றஞ்சாட்டப்பட்டவர் இவ்வுடன்படிக்கையை செய்து கொள்கின்றார் என்பதுடன் ஏதேனும் வகையில் அச்சுறுத்தல் பலாத்காரம் இன்றியும், மிரட்டல் இன்றியும் அல்லது வலுக்கட்டயாயப்படுத்தல் இன்றியும் அத்துடன் இதன் கண் உள்ளடக்கப்பட்டவாறு தவிர வேறு ஏதேனும் வகையில் சத்தியம் அல்லது நன்மை இன்றி சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் குற்றவாளியென மன்றுரைக் கின்றார். |
| 2. குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிந்துகொண்டும், தன்னிச்சையாகவும் மற்றும் உண்மையாகவும் இதன்கண் உள்ளடக்கப்பட்ட நிகழ்வுகளை ஒப்புக் கொள்கின்றார். |
| 3. ……………………………. இன் கீழ் தண்டிக்கப்படற்பாலதான ……………………… என்னும் தவறொன்றுக்கு குற்றவாளி என மன்றுரைக்கின்றார். |
| 4. குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்ததவறுக்கு குற்றவாளி என மன்றுரைக்கின்றாரோ அந்த தவறின் ஒவ்வொரு மூலக்கூற்றையும் புரிந்து கொள்கின்றார் என்பதுடன் அந்தத் தவறுக்கான ஆகக்கூடிய தண்டம் ……………………… ஆகும். |
| 5. நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மன்றுரை உடன்படிக்கையின் எல்லா நியதிகளையும் நிபந்தனையும் குற்றஞ்சாட்டப்பட்டவர் நிறைவேற்றுவதன் அக்குற்றஞ் சாட்டப்பட்டவர் தற்போதைய குற்றப்பகர்வை முன்னெடுத்துச் செல்கின்ற புலனாய்விலிருந்து வேறு எந்தச் குற்றச் சாட்டுதலுக்கும் முகம் கொடுக்கமாட்டார் என குற்றவழக்கு தொடுநர் உடன்படுகின்றார். |
| 6. விளக்கத்திற்கான உரிமை, காட்சிகளை விசாரணை செய்தவதற்கும் குறுக்கு விசாரணை செய்வதற்குமான உரிமை உட்பட அவரது / அவளது அரசியலமைப்புசார் உரிமைகள் பற்றி அவரது / அவளது சட்டப் பிரதிநிதியினாலும் நீதிமன்றத்தினாலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மதியுரை அளிக்கப்பட்டுள்ளார் என்பதுடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் நன்கு அறிவிக்கப்பட்டிருந்து, மேன்முறையீட்டுக்கான உரிமை உட்பட இவ் உரிமைகளை அறிந்து கொண்டும் தன்னிச்சையாகவும் விட்டுக் கொடுத்துள்ளார் என்பதுடன் இந்த மன்றுரை உடன்படிக்கையில் கூறப்பட்டவாறு குற்றவாளி என்ற மன்றுரை ஒன்றை செய்து கொள்வதற்கு உடன்படுகின்றார். |
| 7. அவரது / அவளது குற்றவாளி என்னும் மன்றுரையில் மீது குற்றத்தீர்ப்பளிக்கபட்டதன் மேல் விதிக்கப்படவேண்டிய தண்டனைத் தீர்ப்பு நீதிமன்றத்தின் தனித் தற்றுணிபின்படி உள்ளது என்பதை குற்றஞ்சாட்டப்பட்டார் புரிந்துகொள்கின்றார் தண்டனைத் தீர்ப்பளிக்கையில், குற்ற வழக்குத் தொடுநர் ……………………. ஐ விதப்புரைப்பார் தண்டனைத் தீர்ப்பளிக்கையில் குற்றஞ்சாட்டப் பட்டவர் ……..………………. ஐ விதந்துரைப்பார். |

| |
|---|
| 8. இம்மன்றுரை உடன்படிக்கையில் வெளிப்படையாகத் தரப்பட்டவை தவிரவும் இதன்கண் உள்ளவையுமான குற்றஞ்சாட்டுக்கள் தொடர்பாக வாக்குறுதிகள் உடனப்படிக்கைகள் மற்றும் நிபந்தனைகள் எவையும் செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் இதன்கண் எழுத்தில் வெளிப்படையாக எடுத்து கூறப்பட்டாலொழிய எவையும் செய்துகொள்ளப்படுத்தலாகாது அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரையும் மற்றும் குற்றவழக்குதொடுநரையும் பிணிப்ப தாதலும் ஆகாது என குற்றஞ்சாட்டப்பட்டவர் விளங்கிகக் கொண்டு உடன்படுகின்றார். |
| 9. இம்மன்றுரை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தவறு களுக்கும் மன்றுரை உடன்படிக்கையில் தரப்பட்ட ஒவ்வொரு கூறுகளுக்கும் நான் குற்றவாளியென மன்றுரைக்கின்றேன் இது நான் புரிந்து கொள்ளும் மொழி ஒன்றில் எனக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது இதை நான் அறிந்து கொண்டும், சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் எந்தவிதமான அச்சுறுத்தல் பலாத்காரம், மிரட்டல் அல்லது வலுக்கட்டாயப்படுத்துதல் இன்றியும் செய்கின்றேன்.<br><br>குற்றஞ்சாட்டப்பட்டவர்:.....................<br>திகதி:........................................ .”. |

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்